


வேலூர் நகர அரங்கில் 25.11.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர்" சிறப்பு புகைப்படக் கண்காட்சியை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர். அர.சக்கரபாணி, நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் திருமதி.மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி.அமுலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் ,புகைப்பட கண்காட்சியை அமைத்துள்ள புகைப்பட நிபுணர் கோவை சுப்பு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**"அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே"!**

# வேலூரில் கலைஞர் நூற்றாண்டு விழா புகைப்படக் கண்காட்சி!

## கலைஞர் குறித்து கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் உருக்கம்!

வேலூர், நவ. 28-

கலைஞர் நூற்றாண்டு விழா வையொட்டி, வேலூர் டவுன் ஹாலில் 3 நாட்கள் நடைபெறும் கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரை முருகன் நேற்று முன்தினம் துவக்கி வைத்தார்.

அமைச்சர்கள் சு.முத்து சாமி, அர.சக்கரபாணி, அர சின் கூடுதல் தலைமைச்செய லர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலர் மலர்விழி, கலெக்டர் குமாரவேல் பாண்டியன், கதிர் ஆனந்த் எம்.பி., சட்ட மன்ற உறுப்பினர்கள் நந்தகு மார், கார்த்திகேயன், அமுலு, மாவட்ட ஊராட்சித் தலை வர் பாபு, மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

கண்காட்சியில் கலைஞர் ஆட்சிக்காலத்தில் நிறைவேற் றப் பட்ட திட்டங்கள், சாத னைகள், அவற்றால் மக்கள் பெற்ற பயன்கள், இளமைக் காலம் முதல் அவர் மேற் கொண்ட அரசியல் பயணம், பல்வேறு அரசியல் மற்றும் முக்கிய தலைவர்களுடனான சந்திப்புகள் போன்றவை குறித்து காட்சிப்படுத் தப்பட்டுள்ளன.

இந்தப் புகைப்படக் கண் காட்சியை புகைப்பட நிபு ணர் கோவை சுப்பு ஏற்பாடு செய்திருந்தார்.

கண்காட்சியைப் பார்வை யிட்ட அமைச்சர் துரைமுரு கன் அவர்கள், அங்கு வைக்கப் பட்டுள்ள பார்வையாளர் புத்தகத்தில், 'அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பனே' என்ற வாசகத்தை எழுதி னார்.

## நாகை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி

# ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

## பி.என்.கார்த்தி, ப.உதயக்குமார், அ.பாரிபாலன் பங்கேற்பு!

நாகை, நவ. 28 -

நாகை மாவட்ட இளை ஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணிகளின் மாவட்ட, ஒன் றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து ரையாடல் கூட்டம் நாகை யில் மாவட்ட தி.மு.க. அலு வலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் பி.என்.கார்த்தி, மாவட்ட மாணவர் அணி அமைப்பா ளர் ப.உதயக்குமார், தக வல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. கலையரசன் வரவேற்றார்.

கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலா ளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவரு மான என்.கௌதமன் தலைமை தாங்கி இளைஞர் அணி, மாணவர் அணி, தக வல் தொழில் நுட்ப அணிக ளின் பணிகள் குறித்து பேசி னார்.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ். அசோக், ஜி.தாமோதரன், பன்னீர், டேனியல்சத்தியா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எலக்ட்ரிக்கல் ஆர்.பாலா, செந்தாமரைசெல்வன், உதயா, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பா ளர்கள் எஸ்.செல்வா, ரெக்ஸ், ராபர்ட்கிங் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன், விளையாட்டு மேம் பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர் களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு கழக இளைஞர் அணி செய லாளர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளை நாகை மாவட்டம் முழுவதும், தாய்கழகத்தோடு இணைந்து கழகக் கொடி ஏற்றி, இனிப்பு கள் வழங்கியும், ஏழை, எளி யவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மருத் துவ முகாம் மற்றும் இரத்த தான முகாம் நடத்தியும் சிறப்பாக கொண்டாடுவது என்றும், நீட் விலக்கு, நம் இலக்கு என்று 50 நாள் 50 லட்சம் கையெழுத்துப் பெற்று அதைத் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கும் வகையில் நாகை மாவட்டத்திற்கு என்று நிர் ணயிக்கப்பட்டுள்ள இலக்கைவிட கூடுதலாக பொதுமக்கள், மாணவ, மாணவிகள் என அனைத் துத் தரப்பு மக்களிடம் கையொப்பம் பெற்று அதை வரும் டிசம்பர் 17ம் தேதி சேலம் மாநாட்டில் கழக இளைஞர் அணி செய லாளர் உதயநிதிஸ்டாலினி டம் வழங்கிடுவது என்றும்,

வரும் டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள 2 வது மாநில மாநாட்டிற்கு தொகுதிக்கு 2 ஆயிரம் பேர் என 6000 பேரை சேலம் மாநாட்டில் கலந்து கொள் ளச் செய்வது என்றும் தீர்மா னங்கள் நிறைவேற்றப் பட்டன.

## சேலம் - பொட்டனேரி - முன்னாள் இராணுவ வீரர்

# மு.செந்தில்குமார் 30ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் அஞ்சலி!

சேலம், நவ. 28-

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம், பொட்டனேரி கிராமம் குள்ளமுடையனூரைச் சேர்ந்த - முன்னாள் இரா ணுவ வீரர் மு.செந்தில் குமார் அவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (28.11.2023)கடைப் பிடிக்கப்படுகிறது.

முத்துசாமி - பார்வதி அம்மாள் ஆகியோரின் மூத்த மகனாய் 28.5.1972ல் பிறந்து இராணுவ போர் வீரனாய் பணியில் சேர்ந்து, பணியின் போது 28.11.1993-ல் வீர மரணம் அடைந்த மு.செந்தில் குமார் அவர்களின் பெயர்





சேலம் கலெக்டர் அலுவல கத்தில் பொறிக்கப்பட்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த முன்னாள் இராணுவ வீரர் மு.செந் தில்குமாரின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (28.11.2023) அன் னாரது இல்லத்தில் கடைப் பிடிக்கப்படுகிறது.

கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவரான - அவருக்கு காவல்துறை உதவி ஆய்வாளர் மு.சிவராசு என்ற தம்பியும், மு. மலர்க்கொடி, மு.பாக்கிய லட்சுமி என்ற இரு தங்கைகளும் உள்ளனர். தங்கை மு.மலர்க்கொடி மேச்சேரி ஒன்றிய தி.மு.க. முன்னாள் துணைச் செய லாளராக இருந்தவர் என் பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது நினைவு நாளில் பொட்டனேரி கிராமத்தினர், கழகத்தினர் கலந்துகொண்டு அன்னா ரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்து கின்றனர்.


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான ஆறாவது மண்டல பேச்சுப்போட்டி கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் திருச்சி அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் கே. ஜே. சரவணன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன் ஆகியோர் இணைந்து வழங்கினர். கலந்துகொண்ட மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# ஆலம் விழுதாக... அறிவாலயத் தூணாக...!



பிறந்தநாள் காணும் இந்நன் னாளில் அவருக்குக் கழகத் தைச் சேர்ந்த நாம் அனைவரும் வாழ்த்துக்களைக் கூறுவோம். பல் லாண்டு வாழ்க! பழம்பெரும் கழ கத்தை வலுப்படுத்த, வழிநடத்த, தளபதியின் துணை நிற்க வாழ்க வாழ்க!

முதல்வர் தளபதி அவர்கள் அடிக் கடி அண்ணாவின் வரிகளை நினை வுபடுத்துவார். "மக்களிடம் செல் 'அவர்களுடன் வாழ்' அவர்களிடமி ருந்து கற்றுக்கொள்' அவர்களை நேசி! அவர்களுக்குத் தொண்டாற்று: அவர்களுடன் திட்டமிடு' அவர்களுக் குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்கு 'அவர்களிடம் இருப்பதை வைத்து கட்டமைத்திடு" என்பதே அண்ணாவின் கட்டளை. அதையே தனது கடமையாக்கிக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் மக் களைச் சந்தித்து வரும் பணியில் கடுமையாக ஈடுபட்டு இருக் கிறார் உதயநிதி.

தலைவர் கலைஞர் அவர்கள் போராட்டக் களத்தில் கலந்து கொண்டு சிறையில் இருக்கும் போதுதான் 1953ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் தளபதி ஸ்டாலின் பிறக்கிறார். அதேபோல நெருக்கடி காலத்தில் சிறை கொட்டடியில் தளபதி இருந்தபோது, அவருக்கு நவம்பர் 27ஆம் தேதி மகன் ஒரு வர் பிறக்கிறார். ஆம்; கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு அரசு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை, அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் இன்று.

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப் பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் மக்களின் குறை களை அவ்வப்போது கேட்டு அடிப்படை வசதிகளைச் செய்து தரும் நோக்கில் குறைகளைத் தீர்க்கும் சீரிய தொண்டரா கவே செயல்பட்டு வருகிறார். பொது மக்களின் குறைகள் தன் செவிக்கு வந்து விழுந்தவுடன் கழகச் செயலாக்குநர்களை (Functionaries and Activities) உடனடியாகத் தொடர்பு கொண்டு உண்மை கண்டறிதலுக்கான கேள்வி கேட்பதும், நேரடியாக வந்து நிவர்த்தி செய்ய அதிகாரிகளைக் கொண்டு வேலை வாங்குவதுமான பணிகளில் இருந்து வருகிறார்.

சட்டமன்றத்தில் துறை மானியக் கோரிக்கைகள் மீதும் மற்றும் பல்வேறு விவாதங்களில் கலந்து கொண்டு,பதிலளிக்கும் விதத் தில் உரைகள் நிகழ்த்தி வருகிறார் உத யநிதி. எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட் கும் வினாக்களுக் கும்,உரிய முறையில் விடை அளித்து அவர்களைத் திணற அடிக்கிறார். அன் றாடம் நடக்கும் அரசியல் நிகழ்வுகளில் கலந்து கொண்டுஅவ்வப்போது செய்தி யாளர்கள் கேட்கும் வினாக்களுக்கும், உரிய முறையில் தகுந்த விடையளித்து வருகிறார்.

**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



சனாதனத்தை வேரறுக்க பெரியார் வாரிசாகிச் சண்டமரு தம் போல் அஞ்சா நெஞ்சனாக முழங்கி வருகிறார். மூட நம் பிக்கை இருட்டை விலக்க காஞ்சித் தலைவன் தந்த சூரிய விளக்கை ஏந்தி வலம் வருகிறார்.மொழி, இனத்தைக் காப்ப தில் முத்தமிழ் அறிஞரின் பேரனாகிப் பேரிகை கொட்டி நிற்கி றார். தன்னேரில்லா உழைப்பில் தளபதியின் அன்புப் பிள்ளை யாகக்" கழகத்தின் புயல் வேகத் தொண்டனாகத் திகழ்கிறார்.

தமிழகம் எங்கும் சென்று தேர்தல் காலப் பரப்புரை செய்து, நாடாளுமன்ற சட்டமன்ற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலில் வெற்றிகள் தேடித் தந்ததுடன், அவர் கழகத்திற் கும், தலைமைக்கும் அடலேறாக விளங்கி வருகிறார். தலை மையின் தீர்மானத்திற்கு ஏற்ப, கலைஞர் நூற்றாண்டு விழா நோக்கத்தைக் கருதித் தமிழகத்திலுள்ள மாவட்டம் தோறும் சென்று கிராமங்கள் நகரங்கள்,மாநகரங்களில் கழகத்தின் இருவண்ணக்கொடி ஏற்றிப் பரப்புரை நிகழ்த்துகிறார்., ஆங் காங்கே உள்ள கழக முன்னோடிகள் மூத்தவர்களைச் சந் தித்து அவர்களுக்கு நிதியளிப்புச் செய்வதுடன் குறைகள் கேட் டுக் கலந்துரையாடி தலைமையின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறார்.

கியூபா விடுதலைப் போராளி பிடல் காஸ்ட்ரோ, அவர் நண் பர் சேகுவாரா, தென்னாப்பிரிக்கா விடுதலைப் போராளி நெல் சன் மண்டேலா, சீன மண்ணில் மஞ்சு சர்வாதிகார ஆட்சி ஒழிப்பதற்காக 12,500 கிலோ மீட்டர் நீண்ட நெடும்பயணம் நடத்திய மாவோ எனும் மாசேதுங்; இந்திய விடுதலைக்காகப் போராடிய மகாத்மா காந்தி, தமிழக வீதிகளில் மண்டிக் கிடந்த மூடப் பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்காகச் சமூக விடு தலை நீதி கேட்டுப் போராடிய பெரியார்,அண்ணா, கலைஞர் போன்றவர்கள் எல்லாம் தங்கள் இளமைப் பிருந்தா வனத் தைச் சிறு வயதிலேயே அர்ப்பணித்துத் தியாகம் செய்தவர்கள்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம்| நீதிக்கட்சியின் தொடர்ச்சியாகத் தந்தை பெரியார், அந்தப் பகுத்தறிவுப் பகல வன் சமூக நீதிப் பயணம் பற்றி நடந்த பேரறிஞர் அண்ணா,; அவரின் தொடர்ச்சியாக அவரின் தம்பி முத்தமிழறிஞர் கலை ஞர், அவரின் தொடர்ச்சியாகத் திராவிட மாடல் அரசினைத் தந்து, இந்தியாவிற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் தளபதி மு.க. ஸ்டாலின், அவரின் தொடர்ச்சியைத் தொடர்ந்து இன் றைக்குக் கழக அரசுக்கும், கட்சிக்கும் வழி நின்று, ஆலம் விழுதாக அறிவாலயத் தூணாக அருவி நடை வெள்ளோட் டமாகத் தம்பி உதயநிதி ஸ்டாலின் அரிமா நடை போட்டு வரு கிறார். இயக்கங் காத்த முன்னோடிகள் போட்ட பாதையில், தம் வீறுநடைப் பயணத்தைத் தொடரும் வகையில் இளை ஞர்கள் பட்டாளத்தை கழகத்துக்குக் கொள்கைச் சிப்பாய்களை உருவாக்கி நடந்து கொண்டிருக்கிறார்.

"கழகம் வில்லாம், நின் அணியே கணையாம்! சாதியை விடுத்துச் சமத்துவம் முழங்கு! ஞாயிறு வாழ்த்தி நாளும் உழைத்திடு! தனி உடைமை தகர்த்திடத் தடந்தோள் தட்டு நாடு வாழ நலிவு தீர்த்திடு! பகைவருக்கு வளையேல் |மாயைக்கு மயங்கேல்' 'வாய்மையே போர்வாள்" யானை யைப் போல் பயன்படு" "ழ".கரமாய்ச் சிறப்புறு "என்று தலை வர் கலைஞர் அவர்கள் கழக இளைஞர் அணி பற்றி எழுதி னார். இளைஞர்கள் காட்டாற்று வெள்ளம் போல் இருந்து விடாமலிருக்க கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்கும் நெறியில் வளர்ந்திட உருவாக்கப்பட்ட இளைஞர் அணி இது தான் என்பதை கலைஞர் அவர்கள் சுட்டிக் காட்டி இருந்தார் கள்.1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் இளைஞர் அணி தொடக்க விழாவிற்குத்தலைவர் கலைஞர் அவர்கள் மதுரை ஜான்சிராணி பூங்காவில் வந்தபோது செய்தியாளர் கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு, பதிலளித்தார். "இளைஞர் அணி தொடங்கக் காரணம், இளைஞர்கள் அதிகமான பேர் இருக்கிற காரணத்தால் அதற்கென்று ஓர் அமைப்பு தேவை என்பதால் வலியுறுத்தித் தொடங்கப்படுகிறது" என்று கூறினார்.

"தி.மு.க.வில் இளைஞரணி தொடங்குவதற்காக இளைஞர் அல்லாதவர்களுக்கு தி.மு.க.வில் இனி வேலை இல்லை என்று பொருள் அல்ல; வயதானவர்கள் இளமைத் துடிப்போடு இருப்பதும் உண்டு; இளைஞர்கள் சிலர் வயதானவர்களைப் போல் தனித்துப் போய் நடமாடுவதும் உண்டு; தந்தை பெரி யார் அவர்களைப் பற்றி புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் "வயதில், அறிவில் முதியார், நாட்டின் வாய்மைப் போருக்கு என்றும் இளையார்" என்று குறிப்பிட்டார். ஆகவே, தான் இளமைத் துடிப்பும் இத்தனை வயது வரையில்தான் என்றில்லாமல் அவர்களுடைய உணர்வுகளைப் பொறுத்து இருக்கி றது. இளைஞர் அணி உணர்வுக ளின் அடிப்படையில் மறந்து விடா மல், அதே நேரத்தில் சில குறிப்பிட்ட வயது உடையவர்களுக்கு இயக்கத் திலே ஏற்ற இடத்தைத் தந்தாக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தொடங்கப்படுகின்ற ஒன்று" என்று கோடிட்டுக் காட்டிப் பேசினார்.

இதன் பின்னர் கழகத்தின் சட்டத் திட்டத்தில் சில விதிகள் இளைஞர் அணி அமைப்பிற்காகத் திருத்தம் கொண்டுவரப்பட்டு 1981 மே திங்கள் 16,17 ஆகிய நாட்களில் புதுச்சேரியில் நடைபெற்ற பொதுக் குழுவில் வைக் கப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன. 16 வயது முதல் 20 வயது வரையிலுள்ள இளைஞர்கள் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதற்கு உறுப்பினர் கட்டணம் ஒரு ரூபாய் என்று ஆக்கப்பட்டது. 1980 ஜூன் மாதம் முதல் 1982 ஆகஸ்ட் மாதம் வரை இளைஞர் அணியினரால் தமி ழகமெங்கும் நகரங்கள், ஊர்கள் எனக் கிளைகளைப் பல்லா யிரமாக உருவாக்கும் வகையில் பணியாற்றிக் கழக வளர்ச் சிப் பணி, நிர்வாகிகளை நியமித்தல், செயலாக்கம் செய்யப் பட்டது.. அதன் அடிப்படையிலேயே 1982 ஆகஸ்ட் மாதம் திருச்சியில் இரண்டு நாள் இரண்டாம் ஆண்டு இளைஞர் அணி மாநாடு நடத்தப்பட்டது . தளபதி மு.க.ஸ்டாலின், அன் பில் பொய்யாமொழி, திருச்சி சிவா, இளம் வழுதி, பஞ்சவர் ணம் ஜெயம் ஜூலியன், தாரை மணியன், வாலாஜா அசேன் போன்றவர்கள் பலர் இருந்து ஊர்வலம் எழுச்சியாகவும் பீடு நடையுடன் சிறப்பாகவும் பின்பு மாநாடும் நடைபெற்றன..

இளைஞர் அணி முறைப்படுத்தப்பட்ட பல்வேறு கட்டங் களுக்குப் பின்னர், 1982 இல் அதன் செயலாளராகத் தளபதி மு.க ஸ்டாலின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களால் நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பொறுப்பில் இருந்த 35 ஆண்டு காலத்திற்கு மேலாக, அவர் செல்லாத பட்டி, தொட்டி கள் ஊர்கள் இல்லை; ஏற்றாத கொடிக் கம்பங்கள் இல்லை; பேசாத மேடைகள் இல்லை; அண் ணாவைப் போல் கலைஞரைப் போல் ஊருக்கு ஊர் சென்று கழகத் தோழர்க ளுடன் கலந்து உறவாடி,உண்டு, உறங்கி தோழமையுணர்வுடன் இந்த இயக்கத்தை வழி நடத்திக் கொண்டி ருக்கிறார்.

இன்று அதே நடைமுறையைப் பின்பற்றி இந்த இயக்கத்தை வழிந டத்த கிடைத்திருக்கிற ஒரு புலி போத்து தான் உதயநிதி ஸ்டாலின். "நான் வளர்த்த பிள்ளை, தன் தோளுக்கு மேல் வளர்ந்து,தானே தன் கடமைகளை முனைப்புடனும், சிறப்புடனும் நிறைவேற்றும் ஆற்றலைப் பார்த்து மகிழும் தாயின் மனநிலையில்,தம்பி உதயநிதியை யும் அவர் தலைமையிலான இளைஞரணியில் உள்ள ஒவ் வொருவரின் செயலாற்றலையும் கண்டு மகிழ்கிறேன்" என்று "நெருப்பின் பொறிகளே! நீங்கள் தான் தேவை' "என்ற தலைப்பிட்ட முரசொலி கடிதத்தில் (18.11.2023) பெருமையு டன் பாராட்டியுள்ளார் தளபதி ஸ்டாலின்.

2019 ஜூலை 4ஆம் நாள் கழக இளைஞர் அணிச் செய லாளராகப் பொறுப்பேற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்த இயக்கத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்குப் பல்வேறு ஆக்கப்பணிகளால் கழக நாற்றங்கா லில் இளைஞர் அணி எனும் உணர்வு மிக்க பயிரை நடவு வேலை செய்து வருகிறார். அரசியலில் அஞ்சாமை கொண்ட துணிச்சலுக்குரிய வராக, சுயமரியாதை மானம் காப்பவராக, இடர்ப்பாடுகள் எதையும் தாங்கும் இதயம் படைத்தவராக, மேடைகளில் எழுச்சி மிக்க உரை நிகழ்த்துவராக அனைத் திலும், பேராற்றல் ஒருங்கே படைத்தவராக பரிணமளிக்கிறார்.

கலைஞர் நூற்றாண்டு நூலகங்கள் உருவாக்குதல் அதற் கான நூல்களை வழங்குதல் என்பன போன்ற செயல்களை ஆய்ந்தறிந்து, இயக்கத் தொழர்களைக் கொண்டு இயக்கி வருகிறார். இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல், அமைப் புகளை உருவாக்குதல் என்பன மட்டுமில்லாமல், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், தளபதியார் போன்றோரின் சிறப்பு களைச் சொல்லி அவர்கள் கையாண்ட நெறிமுறைகளைச் செயல்படுத்தக் கூறி அறிவுறுத்துவதில் ஆர்வம் காட்டி வருகி றார். கழக மூத்தவர்கள், முன்னோடிகள், தியாகிகள்,நோய் வாய்ப் பட்டிருப்பவர்களின் முகவரி கேட்டும், வீடு சென்றும் நலம் விசாரிக்கிறார்.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாள் கள் கழக இளைஞர் அணி முதல் மாநில மாபெரும் மாநாடு. அப்போது இளைஞரணி செயலாளராக இருந்த; தற்போ தைய கழகத் தலைவர், முதல்வர்.மு க .ஸ்டாலின் அவர்க ளின் தலைமையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். அத னைக் சுட்டிக்காட்டும் விதத்தில் அப்போதே முரசொலியில் 2007 நவம்பர் 7 ஆம் தேதி முதல், டிசம்பர் 2ஆம் தேதி வரை "இளைஞர்களுக்கு வழி விடுவோம்".. என்ற தலைப்பில் தொடர்ச்சியாக 25 கடிதங்களைக் கலைஞர் அவர்கள் இளை ஞர்களுக்கு எழுச்சி மிகு வரலாற்று சான்றுகளை பலவாறாக எடுத்துக்காட்டி எழுதினார்கள். அதனைச் சுட்டிக்காட்டும் விதத் தில் மீண்டும் அக் கடிதங்களை முரசொலி ஏடு தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. ஆம்.; சேலத்தில் டிசம்பர் 17 இல் நடை பெறவுள்ள தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டினையொட்டிக் கன்னியாகுமரியில் மாபெரும் இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியைக் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இருசக்கர வாக னத்தில் சென்று நவம்பர்15 அன்று தொடங்கி வைத்துள்ளார்.

அரசியல் மாண்புகளையோ, மாநில உரிமைகளையோ மதிக்காத ஒன்றிய ஆட்சியாளர்களால் இந்திய அரசியலமைப் புச் சட்டமே ஆபத்துக்கு ள்ளாகி இருக்கிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளைக் கூட மதிக்காத நியமனப் பதவிக்காரர்களின் அடாவடிகள் கூட்டாட்சி தத்துவத்தைச் சிதைக்கின்றன. மத வாத மொழி ஆதிக்க மானுட விரோத அரசியல் ஒவ்வொரு மாநில மக்களையும் நடுங்கச் செய்கிறது.இவை எல்லாவற் றுக்கும் எதிரான நல்ல தீர்ப்பை 2024 ஆம் ஆண்டில் மக்கள் எழுதப் போகிறார்கள். அதற்கான விழிப்புணர்வு,பரப்புரை தான் இளைஞர் அணி மேற்கொண்டு இருக்கும் இரு சக்கர பேரணி . கருப்பு சிவப்பு இளைஞர் படை மக்களிடம் செல்லட் டும்; மாநில உரிமைகள் பறிக்கப்படுவதால், நீட் தேர்வு போன்ற கொடூரங்கள் எத்தனை உயிர்களைப் பறித்துள்ளன என்பதை எடுத்துச் சொல்லட்டும் நீட் விலக்கத்திற்கான அரைக்கோடி கையெழுத்துக்களைப்பெறட்டும் .ஜனநாயகப் போர்க்களத்தில் வெல்லட்டும்" என்று முதல்வர் தளபதியார் எழுதியுள்ளார்கள். ஆகவே ஒன்று திரள்வோம்; சேலம் நோக்கி இளைஞர் அணி மாநாடு சிறக்க அறிவுரைகளை கேட்கப்புறப்படுவோம்!